டிசம்பர் மாதச் சிந்தனைகள்



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



2022



PUBLISHED BY

COMMUNICATION COMMISSION
DE LA SALLE BROTHERS -INDIA

தெலசால் அருட்சகோதரர்கள்
இந்திய மறைப்பணித்தளம்

## சிந்தனை தொகுப்பாளர் உரை

இறைப்பணிக்காக அழைக்கப்பட்டுள்ளோம் என்று கருதும் நம் ஒவ்வொருவருக்கும் இறைவனின் வார்த்தைகள் வாழ்க்கையின் ஒளியாகவும், வழியாகவும் மற்றும் ஊன்றுகோலாகவும் அமையும் என்பதில் எவ்வித ஐயமில்லை. உன்னதத் தேடலோடு இறைவார்த்தையை வாசித்து தியானிப்போம். நம்மிலும் இறைவார்த்தை செயலாக்கம் பெற வாழ்த்துகிறேன்.

அருட்சகோ. **சேவியர் ராஜா** FSC



லசாலிய அழைப்பு
என்பது வகுப்பறையே
ஆலயமாக,
மேஜையே பலிப்பீடமாக
ஆசிரியரே
பலிப்பொருளாகக்
கொண்டு
இளைஞர்களுக்கு
அறிவையும்,
ஞானத்தையும் அளிக்கும்
**ஒரு தியாக வாழ்வு**

# லசாலிய இறையழைத்தல்

## கல்விப் பணிக்கு இறைவன் அழைக்கிறார்

## வந்து பாருங்கள்

(யோவான் 1: 39)

தொடர்புக்கு
இறையழைத்தல் இயக்குநர்,
தெலசால் சபை அருட்சகோதரர்கள்,
புனித மிக்கேல் அருள் தென்றல்,
தேனி சாலை, நாகமலை,
மதுரை - 625 019,
தொலைபேசி : 9363518327





# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



## சிந்தனைத் துளிகள்

**வலிமையான அடித்தளமும் கட்டமைப்பும் :**

ஒரு கட்டிடத்தை எழுப்ப அறிவாளி தேர்ந்தெடுக்கும் அடித்தளமும் கட்டமைப்பும் நீண்ட காலம் நிலை பெறுகின்றன. ஆனால் அறிவிலி தேர்ந்தெடுக்கும் அடித்தளமும் அதன் கட்டமைப்பும் நிலை குலைந்து போய் விடுகின்றன. இறையரசினைக் கட்டியெழுப்பும் பொறுப்பிலுள்ள நாம் எத்தகையதொரு நிலைப்பாட்டில் இருக்கிறோம் என்பதை இன்றைய வாசகங்கள் நமக்கு எடுத்துரைக்கின்றன.

குழந்தைகளிடையே இறையரசினைக் கட்டியெழுப்பும் கடமையில் இருக்கிற நமக்கு புனித தெலசால், "ஆசிரியர்கள் குழந்தைகள் மனநிறைவோடு பள்ளியை விட்டு ஒவ்வொரு நாளும் நீங்கிச் செல்வதற்கு துணை நிற்க வேண்டும். குழந்தைகளது சறுக்கல்களையும், பழக்க வழக்கங்களையும், தன்முனைப்பினையும் ஆசிரியர்கள் கவனமுடன் ஆய்ந்தறிந்து அவர்களின் மனம் நோகாதபடி அவர்களை கையாள வேண்டும்" என்று கூறுகிறார். இதுவே சரியானதொரு அடித்தளம் இந்த அடித்தளமே அவர்களை நல்லதொரு கற்றலை கட்டியெழுப்பத் தூண்டுதலாக அமையும்.

முதல் வாசகம்
எசாயா 26:1-6

பதிலுரைப்பாடல்
திபா.118:1,8-9,19-21,25-27

நற்செய்தி
மத்தேயு 7:21,24-27

புனித
எலிகியூஸ்

டிசம்பர் 2022
**01**
வியாழக்கிழமை

சிந்தனை
அருட்சகோ. **சேவியர் ராஜா** FSC

### தெலசாலின் பொன்மொழி

இயேசுவின் தோழமையில், நீங்கள் கடவுளின் மேன்மைக்கு சான்று பகர வேண்டும். (MSF)



COMMUNICATION COMMISSION
DE LA SALLE BROTHERS - INDIA



## இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



முதல் வாசகம்
எசாயா 29:17-24

பதிலுரைப்பாடல்
திபா. 27:1,4,13-14

நற்செய்தி
மத்தேயு 9:27-31

புனித பிபியானா

டிசம்பர் 2022

**02**

வெள்ளிக்கிழமை

சிந்தனை
அருட்சகோ. சேவியர் ராஜா FSC

### சிந்தனைத் துளிகள்

**இப்போது அவரைக் காண்கிறேன்.**

நமது தனிப்பட்ட வாழ்வினில் முழு விசுவாசத்தோடு கிறிஸ்து எனக்கு யார்? என்பதை அறிய மறுக்கிறோம். அவரை முழுமையாக கண்டு கொள்வதில் நம் கண்கள் குருடாக இருக்கின்றன. கிறிஸ்தவம் என்பது கிறிஸ்துவை பார்ப்பதற்கான ஒரு வழியாகும். ஆணவம், கண்மம், மாயை ஆகிய மூன்று மலங்களும் நாம் அவரை முற்றிலுமாக காண்பதற்கு தடையாக இருக்கின்றன. புனித தெலசாலின் சீடர்களாகிய நமக்கு அவர் மன ஜெபத்தின் மூலம் கடவுளைக் கண்டடைய அழைக்கிறார். "மன ஜெபம் கடவுளுடன் மேற்கொள்ளும் உரையாடல். உங்களுக்கு நம்பிக்கைத் தருபவை எது என்பதிலும், பாவத்தை முற்றிலுமாக விலக்கி கொள்வதற்கான எண்ணம் எது என்பதிலும், படைக்கப்பட்டுள்ளவற்றின் மீதுள்ள பற்றினை புறந்தள்ளுவதிலும், கடவுளைக் கண்டறிந்து அவரைப்போல ஒழுகுவதிலும், நற்பண்புகளை கடைப்பிடிப்பதிலும் உங்களை நீங்கள் பொருத்திக் கொள்ளுங்கள்" என அவர் எடுத்துரைக்கிறார். நான் பார்வையற்றிருந்தேன். இப்போது அவரைக் காண்கிறேன் என சான்று பகர நாம் அழைக்கப்படுகிறோம்.

**தெலசாலின் பொன்மொழி**

புனித தெலசாலை போன்று நீங்களும் இறைவனால் அவருக்காக பாதயை ஏற்படுத்த அனுப்பப்பட்ட வானவர்கள் ஆகையால் அவர் உங்களின் மாணவர்களில் குடிகொள்ள முடியும் (MSF)

COMMUNICATION COMMISSION
DE LA SALLE BROTHERS -INDIA



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



## சிந்தனைத் துளிகள்

முதல் வாசகம்
எசாயா 61:1-3

பதிலுரைப்பாடல்
திபா. 117:1-2

நற்செய்தி
1 கொரி 9:16-19,22-23

புனித பிரான்சிஸ் சவேரியார்

டிசம்பர் 2022

**03**

சனிக்கிழமை

சிந்தனை
அருட்சகோ. **சேவியர் ராஜா** FSC

### கீழ்த்திசையின் விடிவெள்ளி

புனித தெலசால் புனித பிரான்சிஸ் சவேரியாரைக் குறித்து பின்வருமாறு பதிவிடுகிறார். "அவர் எண்ணற்ற ஆன்மாக்களை நம்ப முடியாத அளவிற்கு கடவுளிடம் அழைத்து வந்தார். நற்செய்தியினை அறிவிக்க அவர் புறப்படும் போதெல்லாம் தூய ஆவியினால் அவர் நிரப்பப்பட்டார். கடவுளின் நற்செய்தியினை எடுத்துரைக்கவும், மறைவகுப்பினை எடுக்கவும், ஒப்புரவு அருட்சாதனத்தை வழங்கவும், நோயாளிகளை சந்திக்கவுமாகிய பணிகளை அவர் ஓய்வின்றி செய்தார். அவர் ஆன்மாக்களை மனமாறச் செய்யும் செயல்களில் அவருக்கு எதிராக எழுந்த எதிர்ப்புகளை கடவுளின் துணையோடு எதிர்கொண்டார். குறிப்பாக, குழந்தைகளுக்கு அவர் சிறப்பாக போதித்தார். ஒரு சிறிய மணியினைக் கையில் ஏந்தி, அவர் அதனை அடித்துக்கொண்டு தெருக்களில் சென்று குழந்தைகளை மறைவகுப்பிற்கு அழைத்தார்."

"நீங்களும் உங்கள் குழந்தைகளை மனமாறச் செய்யவும் அவர்களை கடவுளிடத்திற்கு கொண்டு செல்வதில் வெற்றியடைய விரும்புகிறீர்களா? நீங்கள் எந்தளவிற்கு உங்களை சிறியவராக கருதுகிறீர்களோ அந்தளவிற்கு அவர்களின் உள்ளங்களைத் தொடுவீர்கள்."



**தெலசாலின் பொன்மொழி**

உங்களின் பணிவால் உங்கள் மாணவர்களின் இதயத்தை தொடமுடியும் மற்றும் அவர்களை நல்ல கிறிஸ்துவர்களாக மாற்ற முடியும். (MSF)

COMMUNICATION COMMISSION ★ DE LA SALLE BROTHERS -INDIA ★



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



## சிந்தனைத் துளிகள்

முதல் வாசகம்
எசாயா 11:1-10

இரண்டாம் வாசகம்
உரோமையர் 15:4-9

நற்செய்தி
மத்தேயு 3:1-12

திருவருகைக்காலம்
2-ம் ஞாயிறு

டிசம்பர் 2022


**04**

ஞாயிற்றுக்கிழமை

சிந்தனை
அருட்சகோ. சேவியர் ராஜா FSC

### மீட்பிற்கான திருவருகை

மனமாற்றமே மீட்பிற்கான வாயில். மீட்பினைப் பெறாத வாழ்வில் வளர்ச்சியில்லை. வளர்ச்சியினைத் தராத பழைய வாழ்க்கை முறையிலிருந்து புதியதொரு பொருள் பொதிந்த வாழ்க்கை முறைக்கு மனமுவந்து இசைந்து செயல்படுவதே மீட்பு. பிரிவினையும் பாகுபாடும் ஏற்றத்தாழ்வும் அற்ற சமதர்ம சகோதரத்தை நீதியிலும், அன்பிலும் உண்மையிலும் நிலைநாட்டுவதில் நாம் ஒவ்வொருவருமே நமது மனதினை மாற்றியமைக்க வேண்டியிருக்கிறது. இத்தகைய மனநிலையே நமது வாழ்வு வளர்ச்சியை நோக்கி மேலேழுவதற்கு உரமாக அமைகிறது. இதற்காகவே புனித திருமுழுக்கு யோவான் பாலைவனத்திலே தனது குரலை ஒலித்தார். இதற்காகவே இயேசு என்னும் மீட்பர் இவ்வுலகிற்கு வந்தார். யாதும் ஊரே யாவரும் கேளீர் என்ற பரந்த மனநிலையே இவ்வுலகினில் புதிய வானகத்தினையும் புதிய வையகத்தினையும் படைக்கச் செய்யும். ஆகவே நமக்குள் எல்லைகள் இல்லா உலகினைப் படைப்போம். அதில் இறையரசினைக் கட்டியெழுப்புவோம்.



**தெலசாலின் பொன்மொழி**

என் அன்பு சகோதரரே, துயர நேரங்களில் உங்கள் மனதை விரக்தியடை செய்யாதீர்கள். (கடிதம் : 98)

COMMUNICATION COMMISSION ★ DE LA SALLE BROTHERS - INDIA ★



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



## சிந்தனைத் துளிகள்

முதல் வாசகம்
எசாயா 35:1-10

பதிலுரைப்பாடல்
திபா. 85:8-13

நற்செய்தி
லூக்கா 5:17-26

**புனித சபாஸ்**

டிசம்பர் 2022

**05**

திங்கள்கிழமை

### வறண்ட நிலமும் பாலைவெளியும் களிகூரட்டும்

தான் என்ற அகங்காரத்திலும், தாழ்வு மனப்பான்மையிலும், எதிர்மறையான எண்ணத்திலும், இயலாமை என்னும் மனோபாவத்திலும் வறட்சியே மேலோங்கி நிற்கும். அந்த வறண்ட மனதில் அன்புச்சுனை ஊற்றெடுப்பதில்லை. கிறிஸ்து என்னும் மீட்பர் அந்த உள்ளத்தில் வருகைபுரிய அது இடம் கொடுத்தால், அங்கு வறட்சி நீங்கி வசந்தப் பூக்கள் மலர்ந்து எழும். அந்த மனம் ஆனந்தத்தில் மகிழ்ச்சிப் பண் இசைக்கும். எனவே உறுதியாக நாம் இருப்போம். அச்சம் தவிர்ப்போம். நமது கடவுள் நம்மிடம் வருகிறார். செயல்படாமல் முடங்கிக் கிடக்கும் நம்முடைய வாழ்வின் நம்பிக்கையற்ற பல்வேறு ஏக்கங்களையும் எதிர்நோக்கினையும் முடக்கி விடவே அவர் வருகிறார். நம் வறண்ட மனதினை சுத்திகரித்து பூரண குணமளிப்பவரும் அவரே. நிலை பெயராத நம்பிக்கையின் உத்வேகத்தோடு நம்முடைய மனதை அவருக்கு கொடுப்போம். காணமுடியா பேரொளியாக அவர் அதில் வாசம் செய்வார். அப்போது அத்தூய மனம் ஏற்றிப்போற்றட்டும். அது ஒரு "அசாதாரண நிகழ்வாக" பலருக்கும் சான்று பகரட்டும்.



**தெலசாலின் பொன்மொழி**

கடவுளின் அற்புதங்கள் தினமும் உங்களில் நடக்கிறது. (MSF)

சிந்தனை
அருட்சகோ. சேவியர் ராஜா FSC



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



## சிந்தனைத் துளிகள்

முதல் வாசகம்
எசாயா 40:1-11

பதிலுரைப்பாடல்கள்
திபா. 96:1-3,10-13

நற்செய்தி
மத்தேயு 18:12-14

புனித நிக்கோலாஸ்

டிசம்பர் 2022

**06**

செவ்வாய்க்கிழமை

சிந்தனை
அருட்சகோ. **சேவியர் ராஜா** FSC

### ஏழையின் சிரிப்பினில் இறைவன்

புனித தெலசாலுக்கு மிகவும் பிடித்தமான புனிதர்களுள் நிக்கோலஸ் என்பவரும் ஒருவர். அவரைப்பற்றி புனித தெலசால் கூறும்போது, "இப்புனிதர் ஏழைகளின் மீது வைத்திருந்த அன்பானது மிகவும் ஆச்சர்யத்திற்குரியது. அவர்களின் தேவைகளை நிறைவேற்றுவதில் அவரால் முடிந்த அனைத்து வழிமுறைகளையும் அவர் கையாண்டார். இத்தகைய குழந்தைகளுக்கு கற்பிக்கும் பொறுப்பினில் நீங்கள் இருக்கிறீர்கள். அவர்களிடத்தில் உங்களது மென்மைத் தன்மையினை வெளிக்காட்டுங்கள். அவர்களது ஆன்மீகத் தேவையினை வழங்க முன்வாருங்கள். உங்களது நம்பிக்கை உங்களை நெறிபடுத்த வேண்டும். ஏழைகளிடத்தில் கிறிஸ்து இயேசுவை தரிசித்து வணங்க இது உங்களுக்கு வழிகாட்டியாக இருக்கும். இவர்களை செல்வந்தர்களாக நீங்கள் ஏற்க வேண்டும். ஏனெனில் இவர்கள் இயேசு ஆண்டவரின் வாழும் சாயல்களாக இருக்கிறார்கள். இவர்களின் மீது கடவுள் வைத்துள்ள அன்பினைப் போல அதன் சிறுபங்கினையாவது நீங்களும் பெற்று கொள்ள இப்புனிதரிடம் வேண்டிக்கொள்ளுங்கள்," என்கிறார். ஆகவே, ஏழைகளை அவர்களின் இயல்பிலே ஏற்றுக் கொள்ள ஏழையாக பிறந்த மீட்பரிடம் ஆசிப்போம்.



**தெலசாலின் பொன்மொழி**

மாணவர்கள் மீதான அன்பு உங்கள் செயலில் வெளிபடட்டும். அவர்களில் இயேசு கிறிஸ்து வாழ்கிறார். (MSF)



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



## சிந்தனைத் துளிகள்

### நான் உங்களைத் தாங்குகிறேன்

இவ்வுலகப் படைப்புகள் அனைத்தையும் படைத்து அவைகளை கடவுள் தாங்குகிறார். அவருடைய பராமரிப்பிற்கும் குடிமைக்கும் எதிராக செயல்பட எதுவுமே விலக்களிக்கப்படுவதில்லை. அவரே அனைத்திற்கும் வல்லமை அளித்து வலுவூட்டுகிறார். யாரெல்லாம் வாழ்க்கையின் மாய வலையினில் சிக்குண்டு, தாங்களாகவே துயரங்களில் விழுந்து, நிலையாமையில் பற்றுக்கொண்டதால் வழியப் பெற்ற கசப்பான பாடங்களைச் சுமந்து, தங்களது உடல் நலனையும் மனநலனையும் இழந்து தவிப்பவர்களுக்கு நம் மீட்பரே அவர்களுக்கு ஒரே ஆறுதலாக இருக்கிறார். ஏனெனில் அவரிடம் விரும்பிச் செல்பவர்களுக்கு அவர் கனிவும் மனத்தாழ்ச்சியுடையவராக இருக்கிறார். அவருடைய நிபந்தனையற்ற அன்பினால் நம் காயங்களை அவர் குணமாக்குகிறார்.

புனித தெலசால் கூறுகிறார், "உள்ளங்களைத் தொடக்கூடிய ஆற்றலுக்கான ஆசீரை நீங்கள் இறைவனிடம் அடிக்கடி கேளுங்கள். ஆன்மாக்களை மீட்டெடுக்கும் உங்களது கல்விப் பணியில் உங்களது உழைப்பினை பயனுள்ளதாக ஆக்குவதற்கு இது உதவும்."

முதல் வாசகம்
எசாயா 40:25-31

பதிலுரைப்பாடல்
திபா. 103,1-4,8,10

நற்செய்தி
மத்தேயு 11:28-30

புனித அம்புரோஸ்

டிசம்பர் 2022

**07**

புதன்கிழமை

சிந்தனை
அருட்சகோ. சேவியர் ராஜா FSC



**தெலசாலின் பொன்மொழி**

மாணவர்களின் இதயங்களை தொட கடவுளின் அருளை அடிக்கடி கேளுங்கள்.(MSF)



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



## சிந்தனைத் துளிகள்

முதல் வாசகம்
தொ.நூ 3:9-15,20

பதிலுரைப்பாடல்
திபா. 98:1-4

நற்செய்தி
லூக்கா 1:26-38

புனித கன்னி மரியாவின் அமல உற்பவம்

டிசம்பர் 2022

**08**

வியாழக்கிழமை

சிந்தனை
அருட்சகோ. **சேவியர் ராஜா** FSC

### நமது அன்னை மரியாள்

புனித தெலசால் கூறுகிறார், "மிகவும் ஆசிர்வதிக்கப்பட்ட கன்னி மரியாளை கடவுள் அவருடைய குமாரனுக்கு அன்னையாக முன்குறித்து வைத்தார். அவளுடைய உதிரத்தில் அவரைத் தாங்குவதற்கான தகுதியினை அன்னை மரி பெறுவதற்காக அவரது உடலையும் ஆன்மாவினையும் கடவுள் வடிவமைத்தார். எல்லா இனத்தாருக்கும் மரியாள் தாயாக இருக்க அவர் விரும்பியதால் எக்குறையும் ஏற்படா வண்ணம் அவளை கவனமுடன் பாதுகாத்தார். பாவத்தோடு தொடர்புடைய எதுவுமே அவரை அண்டாதபடி இருக்கும் பொருட்டு கடவுள் தனது தனிப்பட்ட உரிமையினால் அவளை சவாலான பாவத்திலிருந்து விலக்கினார். கடவுளே பரிசுத்தர் என்பதால் ஒரு சிறுகுறையினால் உருவாக்கப்பட்ட படைப்பினோடு அவர் ஒன்றித்து கொள்ள விரும்பவில்லை. ஆகவே, இன்று அன்னை மரியாளை கௌரவித்து மகிமைபடுத்துங்கள். அவள் அனைத்து படைப்புகளையும் விட புனிதமுள்ளது உங்களது வாழ்வினையும் முற்றிலும் விடுவித்து கொள்ள தேவையான அருளினை அவளிடம் வேண்டுங்கள். அவர் கடவுளிடமிருந்து அதனை பெற்று உங்களுக்கு வழங்குவாராக."



### தெலசாலின் பொன்மொழி

மாசில்லா கன்னி மரியாள் :
அன்னையுடன் இணைத்து கடவுளுக்கு நன்றி செலுத்துங்கள். அவளின் வழியாக நம்மை பாவத்தில் இருந்து மீட்க கடவுளிடம் செபியுங்கள். (MSF)

COMMUNICATION COMMISSION
DE LA SALLE BROTHERS - INDIA

# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை

## சிந்தனைத் துளிகள்

முதல் வாசகம்
எசேக்கியல் 47:1-2,8-9,12

பதிலுரைப்பாடல்
எசாயா 48:17-19

நற்செய்தி
திபா. 1:1-6

புனித பீட்டர் ஃபோரியர்

டிசம்பர் 2022

09

வெள்ளிக்கிழமை

### ஞானம் என்னும் அகல்விளக்கு

நாலுபேர் நாலு விதமாக சொல்லுவார்களே என அவர்களின் விமர்சனங்களுக்கு பயந்து, அறிவு நமக்குப் போதிக்கும் வழியினின்று தவறி, உணர்ச்சி சொல்லும் தவறான செயல்களை செய்து நாம் வதைபடுகிறோம். நாம் செய்கின்ற தவறான காரியங்களுக்கு பின்னர் நியாயம் கற்பிக்கிறோம். ஆனால் அது சரியல்ல. ஞானம் என்னும் அகல்விளக்கு நம்மை அழைத்துச் செல்லும் வழியினில் பயணிக்க வேண்டும் என இன்றைய இறைவார்த்தைகள் நமக்கு அறிவுறுத்துகின்றன.

ஞானம் என்னும் அகல்விளக்கு இறைவன் மீது மரியாதை கலந்த அச்சத்தினை நம்மில் ஏற்படுத்துகிறது. அந்த ஞான அச்சமே நாம் மனசாட்சியின்படி எது நல்லது, எது நேர்மையானது, எது நீதியானது, எது சரியானது என்பதனை பகுத்தறிந்து அவைகளை பற்றிக் கொள்ளச் செய்கிறது. எனவே பல்வேறு மாயங்களும் திருப்பங்களும் கொண்ட இந்நிலையற்ற வாழ்வினில் ஞானம் என்னும் அகல் விளக்கினை ஏந்தி துணிவுடன் நிறைவாழ்வினை நோக்கிப் பயணிப்போம்.

"ஞானம் நம்பிக்கையைத் தருகிறது. அந்நம்பிக்கையின் தாக்கமானது அறிவிற்கும், அன்பிற்கும், கிறிஸ்துவைப் போல ஒழுகுவதற்கும், அவரோடு ஒன்றித்து கொள்வதற்குமான செயல்திறனைத் தருகிறது." என்கிறார் புனித தெலசால்.

**தெலசாலின் பொன்மொழி**

உங்கள் மாணவர்களுக்கு நற்செய்தியை கடைபிடித்த வாழ கற்றுக்கொடுத்தீர்களா? அவர்கள் நற்செய்தியை பின்பற்றுவதை உணர்கிறீர்களா? (MSF)

சிந்தனை
அருட்சகோ. சேவியர் ராஜா FSC

COMMUNICATION COMMISSION
DE LA SALLE BROTHERS-INDIA



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



## சிந்தனைத் துளிகள்

### நமக்கு நாமே தலைமை ஏற்போம்

ஏதாவது ஒரு வழிமுறையில் நம்முடைய சமூகத்தை வழிநடத்த தலைவர் ஒருவரை நாம் தேர்ந்து எடுத்து அவரிடத்திலே அதிகாரத்தை ஒப்படைக்கிறோம். ஆனால் அவர் பொறுப்பினை ஏற்று சீர்திருத்தப் பணிகளை மேற்கொள்ளும் போது அவை நமக்குச் "சாதகமாக " இல்லாதபோது அவருக்கு எதிராக நியாயமற்ற முறையில் கடுமையான விமர்சனங்களை முன் வைக்கிறோம். அவருடைய நிர்வாகமே சரியில்லை என அபயக்குரலை உயர்த்துகிறோம். இவருக்கு பதிலாக அவர் வந்திருந்தால எல்லாமே உருப்பட்டிருக்கும் என கருத்து சொல்வோம். இது நம்முடைய மனப்பக்குவமின்மையினையும் நேர்மையாக நாம் தேர்வினை மேற்கொள்ளாமையும் வெளிப்படுத்தும் நல்லதொரு நிர்வாகத்திற்கு நம்மிடையே சுயநலச் சிந்தனைகளை நீக்கிப் பொதுநல மனோபாவம் தழைத்து ஓங்க வேண்டும். பொது நலனில் அக்கறை கொண்டவர்கள் தங்கள் "தேர்வு செய்யும்" போது சாதி, மதம், மொழி இனப்பாகுபாடுகளைப் பார்ப்பதில்லை. ஆகவே நலவாழ்விற்கான நற்காரியங்களை கடைபிடித்து தங்களது வாழ்வினை சீராக கொண்டு செல்பவர் எவரோ, அவர்களே தங்களுக்கு தானே தலைமையினை ஏற்று குன்றின் மேலிட்ட விளக்காக ஒளிர்கின்றனர். அவர்களது உரிமைகள் என்றுமே பறிபோய் விடுவதில்லை. கடமையினை சரியாகச் செய்வோம். உரிமைகளை கேட்டுப் பெறுவோம்.

முதல் வாசகம்
சீராக் 48:1-4,9-11

பதிலுரைப்பாடல்
தி.பா. 80:1,2,14-15,17-18

நற்செய்தி
மத்தேயு 17:10-13

புனித மில்டியாதஸ்

டிசம்பர் 2022

**10**

சனிக்கிழமை

சிந்தனை
அருட்சகோ. **சேவியர் ராஜா** FSC



**தெலசாலின் பொன்மொழி**

என் அன்பு சகோதரரே, உங்கள் துன்பங்கள் அதிகரிக்கிறது என்றால், கடவுளின் அன்பு உங்கள் மீது அதிகமாகிறது.
(கடிதம் : 108)



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



## சிந்தனைத் துளிகள்

முதல் வாசகம்
எசாயா 35:1-6,10

இரண்டாம் வாசகம்
யாக்கோபு 5:7-10

நற்செய்தி
மத்தேயு 11:2-11

திருவருகைக் காலம் 3-ம் ஞாயிறு

டிசம்பர் 2022

**11**

ஞாயிற்றுக்கிழமை

சிந்தனை
அருட்சகோ. **சேவியர் ராஜா** FSC

### அவரைப் பாருங்கள்

கடவுள் தனது மூச்சுக்காற்றினை ஊதி நம்மை படைத்துள்ளார். ஆகவே நம்முடைய வாழ்வு முழுவதும் அவரது உயிர் சக்தியினால் இயங்குகிறது. அந்த சக்தி நம்மோடு நம்மில் வாசம் செய்கிறது. ஆனால் அவரை நாம் நம்முடைய ஞானக் கண்களால் பார்க்க மறுக்கிறோம். அவரைப் பார்க்க பல்வேறு இடங்களில் தேடி அலைகிறோம் என்று அவரை நமது உள்ளத்தில் பார்க்கத் தொடங்குகிறோமோ அன்றிலிருந்து நம்முடைய மனதின் ஊனங்கள் நம்மைவிட்டு அகலும். நாம் முடங்கி கிடக்க மாட்டோம். அவருடைய மகிமைக்காக நாம் தீவிரமாக செயல்பட தொடங்கி விடுவோம். நம்முடைய கண்கள் திறக்கப்பட்டு நாம் அவரையே நோக்கத்தொடங்குவோம். நம்முடைய வாய் அவரது திருநாமத்தை உச்சரிக்கத் தொடங்கும். அவரது பேரன்பினையும் பரிவிரக்கத்தினையும் எடுத்துரைக்கும். நம்முடைய முகம் என்றும் உளமகிழ்ச்சியால் மலர்ந்திருக்கும். துன்பமும் துயரமும் பறந்தோடும். இவ்வுலக நிலையற்றவைகளின் மீதுள்ள பேராசையினைக் கைவிடுவோம். உறுதிப்பொருளான கடவுளை நோக்கி நம் கண்களை திருப்புவோம். வானகம் நம்மில் வசப்படும். மீட்பர் நம்மோடு இருக்கிறார்.

"ஓ, என் இறைவா, நீர் வானத்தையும், பூமியையும் நிரப்புவதால், நீர் எல்லா இடங்களிலுமே வணங்கத்தக்கவராக இருக்கிறீர். நான் உன்னுடைய படைப்பு, இதனால் உமது எல்லையில்லா சிறப்பினையும், இறையான்மையினையும் நான் காண்பேனாக." என்கிறார் புனித தெலசால்.



**தெலசாலின் பொன்மொழி**

நாம் புனிதர்கள் என்பதற்காக அல்ல, மாறாக புனிதமடையவே நற்கருணையைப் பெறுகிறோம். (MSF)



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



## சிந்தனைத் துளிகள்

முதல் வாசகம்
எண் 24:2-7, 15-17

பதிலுரைப்பாடல்
திபா. 25:4-9

நற்செய்தி
மத்தேயு 21:23-27

புனித குவாதலூப் அன்னை

டிசம்பர் 2022

**12**

திங்கள்கிழமை

### அன்பிற்கு அதிகாரம் செய்யத் தெரியாது...

தனிப்பட்ட ஒரு நபரின் மீது நாம் தீராத காழ்ப்புணர்ச்சி கொள்வதால் அவர் பொதுநலனில் அக்கறை கொண்டு செய்யும் நற்செயல்களும் மாற்றத்திற்காக அவர் முன்னெடுக்கும் முயற்சிகளும் கெட்டவையாகி விடாது. நம்மைச் சுற்றி இருப்பவர்களே நமக்குப் பகை. திறந்த மனதுடன் நாம் செய்யும் நல்ல காரியங்களுக்கு எதிராக எழும் எதிர்ப்புகள் நம்மை நிலைகுலையச் செய்து விடுகின்றன. துணிந்து செயல்பட முடியாமல் நம்மை முடக்கிப் போட்டு விடுகின்றன. அவை நம்மிடையே உறவுச் சிக்கலை ஏற்படுத்தி விடுகின்றன. இன்றைய நற்செய்தியில், இயேசு இத்தகைய எதிர்ப்புகளை உணர்ச்சி வசப்படாமல் அறிவினால் ஆய்ந்து மிகவும் இயல்பாக கையாளுகிறார். மிகுந்த ஞானத்தோடு நடந்து அவரது நற்செயல்களைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்கிறார்.

நம்முள் நீக்கமற நிறைந்திருக்கும் சுயநலம், பேராசை, தான் - தனது என்ற ஆணவம், பொறாமை போன்ற மாசுகள் நம்மையும், பிறரையும் முன்னேற விடாமல் தடுக்கின்றன. முதலில் அவைகளை எதிர்ப்போம். அவைகள் வளர்ச்சியை நோக்கி நாம் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடிக்கும் தடையாக நிற்கும் இடைஞ்சல்களாலும், எதிர்மறை எண்ணங்களாலும் கெடுமதியினாலும் நாம் எதனையும் சாதிக்க முடியாது. மாறாக அன்பு நிறைந்த மனங்களால் நாம் பகைமையினை வெல்வோம். பொது நலனில் தனிமனித காழ்ப்புணர்ச்சியினை தூர வைத்துவிட்டு வளர்ச்சி என்னும் பயிருக்கு உரமிடுவோம். இதில் நம் மீட்பரும் நம்மில் இணைந்து செயல்புரிவார் என்பது உறுதியே.



**தெலசாலின் பொன்மொழி**

பிறருக்கு அருளை பெற்றுத்தருவது உங்களின் கடமை. பிறரின் இதயங்களை தொடுவதற்கு நீங்கள் உங்களையே சிறப்பாக செபத்தில் ஈடுபடுத்த வேண்டும். (MSF)

சிந்தனை
அருட்சகோ. சேவியர் ராஜா FSC

COMMUNICATION COMMISSION
DE LA SALLE BROTHERS - INDIA



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



## சிந்தனைத் துளிகள்

முதல் வாசகம்
செப் 3:1-2,9-13

பதிலுரைப்பாடல்
திபா. 34:1-2,5-6,16-17,18,22

நற்செய்தி
மத்தேயு 21:28-32

புனித லூசி

டிசம்பர் 2022

**13**

செவ்வாய்க்கிழமை

சிந்தனை
அருட்சகோ. சேவியர் ராஜா FSC

### அவரின் திருவிருப்பத்தினை நிறைவேற்ற

இறைவனின் வார்த்தை உயிருள்ளது. ஆற்றல் வாய்ந்தது. யாரெல்லாம் அந்த வார்த்தையினை அவர்களது செவியில் ஏற்று அதன்படி செயல்படுகிறார்களோ அவர்கள் விண்ணரசிற்கு உரியவர்களாகின்றனர். கள்ளமும் கபடும் போலித்தனங்களும் மலிந்துபோன நம்முடைய சமூக வாழ்வினில் இறைவார்த்தையினை நாம் செவிகள் ஏற்கவே மறுக்கின்றன. இறை விருப்பத்தின்படியன்று நமது சுய விருப்பு வெறுப்புகளின் படியே இயங்க நம் மனங்கள் ஆசிக்கின்றன.

நம்மிடம் நம்பிக்கையாக ஒப்படைக்கப்பட்டுள்ள குழந்தைகளை நன்முறையில் பராமரிப்போம் என அருட்சகோதரர்களாகிய நாம் வாக்களிக்கிறோம். ஆனால் நடைமுறையில் நாம் இந்த வாக்குறுதியினை காப்பாற்ற முற்படுவதில்லை. பெரும்பாலான நேரங்களில் நம்மிடம் ஒப்படைக்கப்பட்ட குழந்தைகளை ஆசிரியர்களிடமோ அல்லது விடுதி காப்பாளரிடம் ஒப்படைத்துவிட்டு நம்முடைய சொந்த அறையினில் நம்மை முடக்கிக் கொண்டு நம்முடைய விருப்பங்களுக்கு முன்னுரிமை கொடுக்கிறோம். நம்மைச் சுற்றி என்ன நடக்கின்றன என்ற அக்கறையும் நம்மிடம் ஏற்படுவதில்லை. வாக்குறுதியினை ஏற்ற எந்தவொரு லசாலியனும் குழந்தைகள் மீது ஆர்வம் கொண்டு அவர்களின் உலகினில் உறவாட தகுந்த நேரத்தை ஒதுக்கவில்லையெனில் அவருடைய வாழ்வு பரிதாபத்திற்குரியதே. விண்ணரசின் கனவு அவரிடம் பெய்துபோய் நிற்கும்.



**தெலசாலின் பொன்மொழி**

இயேசு கிறிஸ்து உங்களை மற்றவரிடமிருந்து பிரித்து தனது பணியில் அவரின் உடனுழைப்பாளர்களாக சேர்த்துள்ளார். (MSF)

COMMUNICATION COMMISSION
DE LA SALLE BROTHERS-INDIA



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



## சிந்தனைத் துளிகள்

முதல் வாசகம்
எசாயா 45:6-8,18,21-25

பதிலுரைப்பாடல்
திபா. 85:8,9,10-11,12,13

நற்செய்தி
லூக்கா 7:19-23

சிலுவையின் புனித ஜான்

டிசம்பர் 2022
**14**
புதன்கிழமை

சிந்தனை
அருட்சகோ. சேவியர் ராஜா FSC

### செயல்படு அல்லது செத்துமடி

படைப்புகள் அனைத்துமே படைப்பின் பரமனைப் போற்றி புகழ்கின்றன. அவரே அவைகளை ஆள்பவர். ஆகவே அவரே ஆண்டவர். நமது மீட்பராம் இயேசு ஆண்டவர் அவரது அருட்பணியால் அவர் யார் என்பதை அனைவருக்கும் எடுத்துரைக்கிறார். அவருடைய செயல்கள் அனைத்துமே அவரது மகிமையினை எடுத்துச் சொல்லுகின்றன. மனு உருவெடுக்கும் நம் மீட்பர் இன்று நமது நற்செயல்களால் நாம் யார் என்பதை எடுத்துரைக்க அழைக்கிறார். அவரின் சீடர்களாக இருப்பதற்கான தகுதியே அவரைப்போல ஒழுகுதலைக் குறிக்கிறது. "சொகுசு வாழ்க்கை" பொருளற்றது. அது எந்த சுவையினையும் நமக்குத் தராது. ஞானமே நம் வாழ்வினை நெறிப்படுத்துகிறது. நாம் அதனைப் பெற்றுக்கொள்ள வேண்டுமெனில் பணித்தளத்தில் நிபந்தனைகள் எதுவுமின்றி நம்மை அர்ப்பணிக்க வேண்டும். அவ்வாறு நாம் அதில் தன்னார்வத்தோடு அர்ப்பணிக்கையில் ஞானம் நம்மை அழைத்துச் சென்று வாழ்க்கைப் பாடங்களை கற்பித்து கொடுக்கும். கற்ற பாடங்களை நாம் செயல்படுத்தும் போது இவ்வுலகம் நம்மை யாரெனக் கண்டு கொள்ளும். கடவுளின் திருவிருப்பத்தனை தனது அயராத அருட்பணிகளால் இயேசு நிறைவேற்றியது போல வெறும் வார்த்தை ஜாலங்களில் மட்டுமே மற்றவர்களுக்கு புத்திமதியைச் சொல்லிக் கொண்டு அலையாமல் இயேசுவின் விருப்பத்தை நிறைவேற்ற நாம் செயல்படுவோம். இல்லையேல் செத்து மடிவோம்.



**தெலசாலின் பொன்மொழி**

என் அன்பு சகோதரரே, உங்கள் இதயத்தின் ஆழத்திலிருந்து தூய ஆவியார் பேசுவதை கேளுங்கள். அத்தகைய அருளை கடவுள் உங்களுக்கு தர வேண்டுகிறேன். (கடிதம் : 86)



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



## சிந்தனைத் துளிகள்

முதல் வாசகம்
எசாயா 54:1-10

பதிலுரைப்பாடல்
திபா. 30:1,3,4-5,10,11,12

நற்செய்தி
லூக்கா 7:24-30

புனித மரிய கராசிஃபிசா டி ரோசா

டிசம்பர் 2022
**15**
வியாழக்கிழமை

சிந்தனை
அருட்சகோ. **சேவியர் ராஜா** FSC

### நம்புங்கள் நலமடைவீர்கள்

புனித தெலசால் கூறுகிறார், "புனித திருமுழுக்கு யோவான் யூதர்களுக்கு அவர்களின் எண்ணங்களை நெறிப்படுத்தவும் மீட்பருக்கென ஒரு வாயிலை அவர்களின் இதயங்களில் ஏற்படுத்த விரும்பினார்.

பாவத்தின் மட்டில் ஒரு உண்மையான பயம் யூதர்களுக்குத் தேவையாக இருந்தது. விரியன் பாம்பின் சந்ததியினராக அவர்கள் இருந்ததை அவர் கடிந்து கொண்டார். இறுதி தீர்வையினை குறித்து அவர்கள் அச்சமடைய வேண்டும் என அவர்களை மன்றாடினார். கனிதராத ஒவ்வொரு மரமும் வெட்டுண்டு நெருப்பில் எறியப்படும் என்றார். நற்செயல்களை அவர்கள் கடைபிடிக்க அவர்களை வலியுறுத்தினார். அவைகளாலன்றி அவர்கள் மேற்கொள்ளும் நேர்ச்சைகள் எப்பயனையும் அளிக்காது என்பதை அறிவுறுத்தினார். அவர்களது தந்தையாம் ஆபிரகாமினை அவர்கள் பெற்றுப் பெருமைபட்டு கொள்வதை அவர்களுக்கு எவ்வுரிமையுமில்லை என்பதனை அவர்களுக்கு வெளிப்படுத்தினார். ஆபிரகாமைப் போல அவர்களும் செயல்பட வேண்டுமென்றார். நற்காரியங்களை அவர்கள் செய்ய வேண்டுமென்றார். நற்காரியங்களை அவர்களின் வாழ்க்கை முறையினை மாற்றியமைத்து கொள்ளவில்லையெனில் அவர்கள் நல் மீட்பினைப் பெற வாய்ப்பில்லை என்றார். புனித திருமுழுக்கு யோவான் கூறிய இவ்யோசனை நீங்கள் உங்களது இதயத்திற்கு எடுத்துகொள்ளுங்கள். அவைகளை உங்களது வாழ்வினில் கவனமாகப் பின்பற்றுங்கள், என்கிறார், ஆகவே மீட்பரின் வருகைக்கு பாதையை ஆயத்தப்படுத்திய திருமுழுக்கு யோவானின் வார்த்தைகளை நம்புவோம். நலம் பெறுவோம்."



**தெலசாலின் பொன்மொழி**

நீங்கள் இயேசுவிற்காக பிறரின் இதயத்தை தயார் படுத்த வேண்டும். அதற்கு முன்னதாக நீங்கள் உங்கள் மனதை ஆர்வமுள்ளதாக மாற்ற வேண்டும். (MSF)



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



## சிந்தனைத் துளிகள்

### நம் வாழ்வே சான்று பகர வேண்டும்

நற்செயல்களே நம் வாழ்விற்கான நற்சான்றுகள். நாம் மீட்பினை அடையவேண்டுமெனில் நற்செயல்களை கடைபிடித்து வாழுமாறு இயேசு கூறுகிறார். அவையே இறைவனின் திருவிருப்பத்தினை நிறைவேற்றி வருவதற்கான நற்சான்றுகள். எளியோருக்கு இரங்குதலும், நீதியை நிலைநாட்டுவதும், உண்மைக்குச் சான்று பகருதலும், பிழைகளைப் பொறுத்துக் கொள்வதும், எதிர்பார்ப்பு எதுவுமின்றி தேவைப்படுவோருக்கு உதவிகளைப் புரிதலும் போன்ற நற்செயல்கள் நம்மை எரிந்து சுடர்விடும் விளக்காக மாற்றும்.

புனித தெலசால் அவர் வாழ்ந்த காலத்தில் நிலவிய கொடிய வறட்சியின் போது பிரான்ஸ் தேசத்திலுள்ள எளியோர் மிகுந்த சிரமங்களுக்கு ஆளாகினர். ஒருவேளை உணவுக்கு கூட வழியில்லாமல் தவித்தனர். இதனை கண்ணுற்று எளியோருக்கு மனமிரங்கிய அவர் தன்னுடைய உடமைகள் அனைத்தையும் விற்று அதில் வந்த பணத்தைக் கொண்டு அவர்களுக்கு நற்செயல் புரிந்தார். தானும் ஏழையாகி நீதியை நிலைநாட்டினார்.

நுகர்வு கலாச்சாரத்தில் வாழக்கூடிய நாம் பிறரோடு பகிர்தலை குறித்து நம்முடைய நிலைப்பாடு எத்தகையது. பொருட்களின் மீதுள்ள பற்றுதல்களையும், பதவி, அந்தஸ்து போன்றவற்றின் மீதுள்ள தீவிர நாட்டங்களையும், வசதியாக இருக்கவேண்டும் என்பதன் மீதுள்ள மோகத்தையும் விட்டொழித்து இறையரசினைக் கட்டியெழுப்பும் செயல்களில் இறங்குவோம்.

முதல் வாசகம்
எசாயா 56:1-3,6-8

இரண்டாம் வாசகம்
திபா. 67:1-2,4,6-7

நற்செய்தி
யோவான் 5:33-36

புனித அடிலெய்டு

டிசம்பர் 2022

**16**

வெள்ளிக்கிழமை



**தெலசாலின் பொன்மொழி**

நீங்கள் பிறருடன் நட்புடன் பழகவில்லை என்றால் கடவுளின் அன்பை பெற இயலாது. (MSF)

சிந்தனை
அருட்சகோ. சேவியர் ராஜா FSC



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



## சிந்தனைத் துளிகள்

முதல் வாசகம்
தொ.நூ.49:1,2,8-10

பதிலுரைப்பாடல்
திபா. 72:1-4,7-8,17

நற்செய்தி
மத்தேயு 1:1-17

புனித லாசர்

டிசம்பர் 2022

**17**

சனிக்கிழமை

சிந்தனை
அருட்சகோ. சேவியர் ராஜா FSC

### தலைமுறைகள் தோறும்..

இன்றைய வாசகங்கள் யூதாவின் தலைமுறைகளை எடுத்துரைத்து உலக மீட்பராம் இயேசு கிறிஸ்துவும் இத்தலைமுறை வரிசையில் பிறந்தவர் என நமக்கு உறுதியுடன் பிரகடனப்படுத்துகின்றன. என்னுடைய தொடக்கமாகிய மரபு எங்கிருந்து தோன்றி அது தழைத்தோங்கி வழிவழியாய் வருகிறது என்பதை அறிந்து வைத்திருப்பது நாம் ஒவ்வொருவரின் கடமையாகிறது. அது நம் வாழ்வதற்கான அர்த்தத்தினையும் சமூக அடையாளத்தையும் நமக்கு தருகிறது.

புனித தெலசாலை தலைவனாக ஏற்று அவருடைய சீடர்களாக அவரது அருட்பணியினை ஏற்றுச் செய்கிற நாம் அவர் இச்சபையினை தோற்றுவித்தற்கான நோக்கத்தினையும் இதன் வரத்தினையும் அறிந்து கொள்வதும், இவை எவ்வாறு வழிவழியாகப் பின்பற்றப்பட்டு வந்துள்ளது என்பதை நம் கருத்தில் ஏற்பது சாலச்சிறந்தது. ஏழை குழந்தைகளுக்கு மனித மற்றும் இறை மதிப்பீடுகளை கொண்டதொரு அறிவான்மிகக் கல்வியினை வழங்குவது லசாலியர்களாகிய நமக்கு வழங்கப்பட்டுள்ள தனிவரமாகும். இதன் மூலமாக கடவுளை விட்டுத் தொலைவிலுள்ள குழந்தைகளை கடவுளிடம் இட்டுச் செல்லவும், அவர்களது புனிதத்திற்காகவும் நமது தனிப்பட்டவரின் புனிதத்திற்காகவும் பாடுபட்டு விண்ணரசின் வாயிலை அடைவது நம் கடனாக இருக்கிறது. தொன்று தொட்டு செய்து வரக்கூடிய இவ்வழியினை நாம் பேணுவோம்.



**தெலசாலின் பொன்மொழி**

என் அன்பு சகோதரரே, உங்கள் வாழ்வில் நீங்கள் எதிர்கொள்ளும் சோதனைகள், சந்தேகங்கள், உங்களை விசுவாசத்தில் வளர்க்கும் என்பதும் உங்களுக்கு நன்றாகவே தெரியுமல்லவா. (Ltr. 108)



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



## சிந்தனைத் துளிகள்

முதல் வாசகம்
எசாயா 7:10-14

இரண்டாம் வாசகம்
உரோமையர் 1:1-7

நற்செய்தி
மத்தேயு 1:18-24

திருவருகைக் காலம் 4-ம் ஞாயிறு

டிசம்பர் 2022

18

ஞாயிற்றுக்கிழமை

### இறைவனுக்குச் செவிமடுங்கள் :

கடவுள் நாம் ஒவ்வொருவருக்கும் ஒரு திட்டத்தை முன்குறித்து வைத்துள்ளார். அவரது திட்டத்தை முயன்றறிவது நம்முடைய கடமையாகும். அதற்கு நம்மிடம் செவிமடுத்தலும் பணிவும் தேவை. இவ்விரண்டையும் நேர்மையுடன் செய்வதற்கு நம்மிடம் துணிவு தேவை. நம்முடைய பலவீனங்களினால் தேவையற்றவைகளின் மீது பற்றினை ஏற்படுத்திக் கொண்டு அவைகள் நமக்கு ஏமாற்றத்தையும் வருத்தங்களையும் தரும்போது நாம் மகிழ்ச்சியை இழந்தவர்களாய் முடங்கி போய்விடுகின்றோம். இன்றைய நற்செய்தி வாசகங்களின் யோசேப்பும் மரியாளும் மிகவும் எளிய மனிதர்களாக நம் கண்முன் நிறுத்தப்படுகின்றனர். ஆண்டவரின் திட்டத்திற்கு அவர்கள் மிகவும் அழகாக செவிமடுக்கின்றனர். அவர்களது சுயவிருப்பு வெறுப்புகளை புறம்பே தள்ளிவைத்து விட்டு கடவுளின் விருப்பத்திற்கு பணிகின்றனர். எளிய இவ்விரு மனங்களிலே நேர்மையானது குடிகொண்டிருந்தால் அவர்கள் துணிவுடன் இறைத்திட்டத்திற்கு "ஆகட்டும்" என வாக்களிக்கின்றனர். கடவுளின் பார்வையில் இவ்விரு இதயங்கள் விலைமதிப்பற்றது. இவர்களை நம் வாழ்வின் முன்மாதிரிகையாகக் கொள்வோம். ஆகாய வெளியைப் போல பரந்த மனதுடன் கடவுள் நமக்கு குறித்துள்ள மீட்பிற்கான திட்டம் என்ன என்பதை முயன்றறிவோம். நம்முடைய சுயநலன்களை கைவிட்டு பணிவிலும் நேர்மையாக செவிமடுத்தலிலும் துணிவு பெறுவோம். உலக மீட்பர் நம் எளிய உள்ளங்களை ஆளுகை செய்யட்டும்.



### தெலசாலின் பொன்மொழி

என் அன்பு சகோதரரே, உங்களை சூழ்நிலைக்கு ஏற்ப மாற்று, உங்கள் சோதனைகளை எதிர்கொள்ளுங்கள். (Ltr : 44)

சிந்தனை
அருட்சகோ. சேவியர் ராஜா FSC



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



## சிந்தனைத் துளிகள்

முதல் வாசகம்
நீ.த 13:2-7,24-25

பதிலுரைப்பாடல்
திபா. 71:3-6,16-17

நற்செய்தி
லூக்கா 1:5-25

புனித
நெமிசியூஸ்

டிசம்பர் 2022

**19**

திங்கள்கிழமை

### நேர்மை என்னும் மகுடம்

மீட்பர் வருகையின் வழித்தடத்தை ஆயுத்தம் செய்ய சாம்சன் என்பவரும் திருமுழுக்கு யோவானும் முன்மொழியப் படுகின்றனர். ஒருவர் உடலால் பலமிக்கவராகவும் மற்றொருவர் வாக்கினை எடுத்துரைப்பதில் வல்லமையுற்றவராகவும் இருந்தார். இவ்விருவரின் பெற்றோர்களுமே வயது முதிர்ந்தவர்கள். இறைவாக்கிற்கு செவிமடுத்துப் பணிபவர்களாக இருந்தனர். அதேவேளையில் மிகவும் நேர்மையாளராக இருந்தனர். கடவுளை மட்டுமே தஞ்சம் என வாழ்ந்தனர். நீதியும் நேர்மையும் உண்மையுமே கடவுளை மகிழ்ச்சியடையச் செய்வதற்கான குண இயல்பாகும். இவைகளைப் பெற்றிருப்பவர்களை கடவுள் என்றுமே கைவிட்டதில்லை. அவரது கடைக்கண்பார்வை என்றுமே அவர்கள் மீது பட்டுக் கொண்டிருக்கும். அவர்களிடத்திலே அவரது வியத்தகு செயல்கள் அரங்கேறும். குழந்தைச் செல்வமில்லாது சமூக ஏளனங்களுக்கு வதைப்பட்டு பெருந்துயரிலும் ஏக்கத்திலும் இருந்த இத்தம்பதியரின் நேர்மையான குணத்தினை கண்டு அவர்களின் மூலமாக அவரது மீட்புத் திட்டத்தினை கடவுள் நிறைவேற்றுகிறார்.

எதிர்பாராதவைகளும் சிக்கல்களும் நிறைந்த நம் வாழ்வில் நாம் நேர்மையினையும், நீதியையும், உண்மையினையும் என்றுமே இறுகப் பற்றிக் கொள்வோமாக. நம்மிடம் நம்பி ஒப்படைக்கப்படுகிற குழந்தைகளை பண்படுத்தி அவர்கள் என்றும் நேர்மையிலும், உண்மையிலும், நீதியிலும் நிலைத்து வாழ அவர்களுக்குத் துணைபுரிவோமாக இதன் மூலம் கடவுளின் வியத்தகு செயல்கள் நம்மிலும் அவர்களிடத்திலும் நடைபெறட்டும்.



**தெலசாலின் பொன்மொழி**

என் அன்பு சகோதரரே, கடவுளின் அறிவுரைப்படி நடப்பது எவ்வளவு முக்கியம் என்பது உங்களுக்கு தெரியும். (கடிதம் - 86)

சிந்தனை
அருட்சகோ. சேவியர் ராஜா FSC



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



## சிந்தனைத் துளிகள்

முதல் வாசகம்
எசாயா 7:10-14

பதிலுரைப்பாடல்
திபா. 24:1-6

நற்செய்தி
லூக்கா 1:26-38

சிலோஸின்
புனித டோமினிக்

டிசம்பர் 2022

**20**

செவ்வாய்க்கிழமை

சிந்தனை
அருட்சகோ. **சேவியர் ராஜா** FSC

### கடவுள் நம்மோடு

கடவுள் மனிதரை விட்டுத் தொலைவில் வானில் ஏதோ ஓரிடத்தில் இருக்கிறார். நாம் அவரைப் போய் அடைய வேண்டும். அவர் மேலிருந்த படியே நம் வேண்டுதல்களுக்கு ஆசி வழங்குகிறார் என்ற நம்பிக்கை பல்வேறு மதத்தவரிடையே நிலவி வருகிறது. ஆனால் கபிரியேல் தூதரின் மங்கள வாக்கின் மூலம் கிறிஸ்தவ மறை நமக்கு மகிழ்ச்சியூட்டும் வேறொரு நம்பிக்கையினைத் தருகிறது. அதுவே"இம்மானுவேல்" என்ற மங்களச் சொல். கடவுள் நம்மோடு இருக்கிறார் என்ற நம்பிக்கையூட்டும் இந்நற்சொல் நமக்கு உற்சாகத்தையும் பேரானந்தத்தினையும் தருகிறதல்லவா! சஞ்சலப்படும் நம் மனங்களுக்கு இது ஆறுதலையும் அமைதியையும் தருகிறதல்லவா! கடவுள் மறு உருவெடுத்து இவ்வுலகிற்கு வந்து, நம்மோடு வாழ்ந்து, நாம் முடிவில்லாத வாழ்வினை அடைவதற்கான வழிகளையும் கற்பித்து கொடுத்து, இறுதியில் நம் பாவங்களை போக்கத் தன்னுயிரினை கொடுத்து, சாவினை வென்று இரட்சகராக மாறிய அவரது பேரன்பினை நினைத்து உண்மையில் நாம் பெருமை கொள்ள வேண்டும். கடவுள் நம்மோடு இருக்கிறார் என்ற இந்த மங்களச் சொல் நமக்கு மந்திர சொல்லாகட்டும். வாழ்வின் கொடிய மாய வலைகளில் நாம் விழும் போதெல்லாம் என்னோடு கடவுள் இருக்கிறார். நான் அசைவுறோன். அவர் என்னோடு இருந்து என்னைத் தாங்குகிறார் என விசுவசிப்போம்.



**தெலசாலின் பொன்மொழி**

இயேசு உங்களுள் வர தயாராக உள்ளார். ஆனால் நீங்கள் அவரை பெற தயாராக இல்லையா? (MSF)



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



## சிந்தனைத் துளிகள்

முதல் வாசகம்
இபா. 2:8-14

பதிலுரைப்பாடல்
திபா. 33:2-3,11-12,20-21

நற்செய்தி
லூக்கா 1:39-45

புனித பீட்டர் கனீசியுஸ்

டிசம்பர் 2022
**21**
புதன்கிழமை

சிந்தனை
அருட்சகோ. **சேவியர் ராஜா** FSC

### மகிழ்ந்து களிகூர்வோம்

உலக இரட்சகரின் திருவருகைக்காக நாம் தயாரித்து கொண்டிருக்கும் இத்தருணத்தில் கன்னிமரியாளின் திருவருகை அவரது சகோதரி எலிசபெத்தம்மாளை மகிழ்ச்சியால் களிகூறச் செய்கிறது. அதோடு அவரது வயிற்றிலிருந்த குழந்தையும் மகிழ்ச்சியால் துள்ளியது. கன்னிமரியாள் கடவுளின் தாய். கடவுள் நமக்கு கொடையாக கொடுத்த நமது தாயும் அவரே. அத்தாய் நமது உள்ளமாகிய இல்லத்திற்கு வரும்போது "என் ஆண்டவரின் தாய் என்னிடம் வர நான் யார்?" என தாழ்மையுடன் அவரையும் அவரது வயிற்றில் இருக்கும் உலக மீட்பரையும் இன்று வரவேற்போம். தாழ்நிலையில் இருக்கும் நம்மிடம் அன்னையின் கடைக்கண் பார்வை படுவதை நினைத்தும், அவரது வருகையினையும் நினைத்தும் பெரு மகிழ்ச்சியினை அடைவோம்.

புனித தெலசால் கூறுகிறார், "என்றுமே ஆசிர்வதிக்கப்பட்ட கன்னிமரியாள் எலிசபெத்தின் வீட்டிற்கு சென்று அவரைச் சந்திக்க இறைவன் ஆசைப்பட்டார். ஏனெனில் அவரது குமாரனாகிய இயேசுவின் பிரசன்னத்தினால் திருமுழுக்கு யோவானைப் புனிதப்படுத்த அவர் விரும்பினார். திருமுழுக்கு யோவானும் தாயின் கருவினில் இருந்து இயேசுவின் அருகாமையினை அக்களிப்பால் துள்ளினார். இதன் மூலமாக வஅர் இயேசுவிற்கு அவருடைய வணக்கத்தை செலுத்த கடவுள் விரும்பினார். ஆகவே நீங்கள் உங்களது அனுதின ஜெபவேளையிலும் நற்கருணையிலும் அவரை வணங்குங்கள். என்கிறார்."



**தெலசாலின் பொன்மொழி**

அன்னை மரியாள் காணிக்கையாக்கப்படுதல்
உங்களின் பிரச்சனைகளைவிட கடவுளின் இரக்கம் அதிகமானது (MSF)



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



முதல் வாசகம்
1 சாமு 1:24-28

பதிலுரைப்பாடல்
1 சாமு 2:1,4-8

நற்செய்தி
லூக்கா 1:46-56

புனித பிரான்சிஸ் சேவியர் காப்ரினி

டிசம்பர் 2022

**22**

வியாழக்கிழமை

சிந்தனை
அருட்சகோ. **சேவியர் ராஜா** FSC

## சிந்தனைத் துளிகள்

### நீதியை எடுத்துரைக்கும் புகழ்ச்சி

அன்னை மரியாளின் இறைபுகழ்ச்சிப் பாடல் பல்வேறு மனித மனோ பாவங்களை நமக்கு அறிக்கையிடுகின்றது. நாம் கடவுளின் படைப்புகள். அவரின் சாயல்கள். இந்த உன்னதமான உண்மையினை நாம் ஒருநாளும் மறந்துவிடமுடியாது. இதனை நினைத்து நமது உள்ளம் போற்றிப் பெருமை கொள்ள வேண்டும். அவரது மீட்பிற்கான செயல்களை நினைத்துப் பேருவகையடைய வேண்டும். கனிவும், பணிவும் கொண்ட எளியவர்களை இச்சமூகம் உரிய மதிப்பினை அளிக்காமல் அவர்களை அலட்சியமாக கையாண்டாலும் கடவுளின் கடைக் கண் பார்வை எப்போதும் அவர்களின் மீது இருக்கும். அவர்களைக் கொண்டு அவர் பெரியதனை ஆற்றுவார். உள்ளத்தில் செருக்குடன் சிந்திப்பவர்களையும் அவர் சிதறடிக்கிறார். அதேவேளையில் அதிகாரத்துடன் சிந்திப்பவர்களை அடிபணிய வைக்க அதற்கு மேல் இன்னொரு அதிகாரம் உண்டு. ஆனால் அன்பினை செலுத்துபவர்களை அடிபணிய வைக்க அன்பைத் தவிர வேறொன்றுமில்லை. ஆணவம் கொண்ட மனிதரிடம் பதவியும் அந்தஸ்தும் என்றுமே நிலைத்து நிற்பதில்லை. அவர்களின் ஒழுங்கற்ற செயல்களே அவர்களை வீழ்த்தும். செல்வத்தின் பயன் ஈதலே. ஆனால் பிறர் நலனில் அக்கறை கொள்ளாமல் குவிக்கப்படும் செல்வமானது சுவடின்றி மறைந்து போகும். ஆகவே கனிவும் மனத்தாழ்ச்சியும், எளிமையும் கொண்ட மனித மனங்கள் இறைவனது ஆசீரை என்றுமே பெறும். அவரது உள்ளங்கள் அன்னை மரியாவைப் போல இறைபுகழ்ச்சிப் பண்ணிசைத்துப்பாடும். நீதியை பிரகடனப்படுத்தும்.



### தெலசாலின் பொன்மொழி

என் அன்பு சகோதரரே, உங்கள் பணியில் நீங்கள் காட்டும் ஆர்வம், உங்கள்மேல் கடவுளின் அருளை நிறைவாக பொழியும். (Ltr:17)



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



## சிந்தனைத் துளிகள்

முதல் வாசகம்
மலாக்கி 3:1-4 4:5-6

பதிலுரைப்பாடல்
திபா. 25:4-5,8-10,14

நற்செய்தி
லூக்கா 1:57-66

காண்டி நகர்ப் புனித ஜான்

டிசம்பர் 2022

**23**


வெள்ளிக்கிழமை

சிந்தனை
அருட்சகோ. **சேவியர் ராஜா** FSC

### அவரின் வருகை நம்மைப் புடமிடவே!

யூத இறைவாக்கினர்களுள் இறுதியானவர் மலாக்கி என்ற இறைவாக்கினர் ஆவார். அவர் திருமுழுக்கு யோவானின் வருகையினையும் கிறிஸ்துவின் பாதையினைச் செம்மைப்படுத்தவே அவர் வருகிறார் என முன்னறிவிக்கிறார். இன்றைய நற்செய்தியில் அவருக்கு பெயர் சூட்டப்படுகிறது. கடவுளின் பேரிரக்கத்தினைப் பெற நாம் மனம் மாற அவர் நம்மை அறிவுறுத்துகிறார்.

யோவானின் வருகையும் மீட்பரின் வருகையும் நாம் புடமிடப்படுதற்காகவே அமைகின்றன. பாவம் என்னும் இருள் நிரம்பி, கடவுளின் அருகாமையில் இருக்க மறுத்து, இறைவனின் அன்பைப் பெறுவதற்கான தகுதியினை இழந்து, சாத்தானின் கொடும் பிடியில் சிக்குண்டவர்களாக நாம் இருக்கிறோம். மீட்பரின் வருகை நம்மை பழைய புரையோடிய வாழ்க்கை முறையிலிருந்து விடுபட்டு அவரின் அருகாமையில் அவரது பாதுகாப்பினில் வாழும் வாழ்க்கை முறைக்கு நம்மை அழைக்கிறது. அவரது வருகை நம் மனங்களில் புதைந்து கிடக்கும் மாசுகளை அகற்றி நாம் உள்ளங்களை புடமிட்டுச் சுத்திகரிக்க அமைந்துள்ளது. ஆகவே அவரிடத்தில் நம்மை முழுமையாக ஒப்படைக்கும் போது அவர் நம்மைப் புனிதப்படுத்துவராக...அவர் நம்மில் வரவும் அவரது பேரிரக்கம் நம்மில் நிலைபெற நமது உள்ளங்களில் நற்பாதை அமைப்போம்.



**தெலசாலின் பொன்மொழி**

நீங்கள் எதை செய்ய வேண்டுமோ அதை பற்றி மட்டும் சிந்தியுங்கள், அதற்காக கடவுளிடம் செபியுங்கள்.
(Ltr. 15)

COMMUNICATION COMMISSION ★ DE LA SALLE BROTHERS - INDIA ★



## இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



### சிந்தனைத் துளிகள்

முதல் வாசகம்
2 சாமு 7:1-5,8-12,16

பதிலுரைப்பாடல்
திபா. 89:1-4,26,28

நற்செய்தி
லூக்கா 1:67-79

திருவருகைக் காலம் நான்காம் வாரம்

டிசம்பர் 2022

**24**

சனிக்கிழமை

சிந்தனை
அருட்சகோ. சேவியர் ராஜா FSC

**தேடி வரும் விண்ணக விடியல்**

இத்திருவருகை காலத்தில் யோவானின் தந்தை சக்கரியாஸ்ஸின் வாய் கடவுளின் புகழினை எடுத்துரைக்கிறது. கடவுள் இம்மனுக்குலத்தின் மீது வைத்திருக்கும் பேரன்பினையும் அவரது பேரிரக்கத்தினையும் இப்புகழுரை நமக்கு வெளிப்படுத்துகின்றது. நாம் பெரும்பாலும் நம்பிக்கைக்குரியவராக இருப்பதில்லை. நம்முடைய வாக்குறுதிகள் போலியானவை. சுயநலனை மட்டுமே மனதில் கொண்டு அவைகள் வழங்கப்படுகின்றன. அவைகள் வெற்று வாய்ச்சவால்களே. ஆனால் கடவுள் நமக்களித்த வாக்குறுதிகள் நம்பகத் தன்மைக்குரியவை. அவை நம்மீது அவர் கொண்ட பேரன்பினால் வழங்கப்பட்டவை. அவை நேர்மையானவை. மனுகுலத்திற்கு விடியலைத் தேடி தருபவை. சக்கரியாஸ் கடவுளின் நம்பகத் தன்மையை புகழுரைக்கிறார். அவர் அளித்த வாக்குறுதிகளை அவர் நிறைவேற்றியுள்ளதை வெளிப்படுத்துகிறார். நாமும் நம்முடைய வாக்குறுதிகளுக்கு நம்பிக்கையுரியவராக இருக்கவும் அவைகளை நிறைவேற்றுவதற்கும் அழைக்கப்பட்டிருக்கிறோம். கடவுள் நம்மை நம்பிக்கையுரியவராகவும் அர்ப்பணிப்புரியவராகவும் இருக்க அழைத்துள்ளமைக்கு அவருக்கு நாம்



**தெலசாலின் பொன்மொழி**
நீங்கள் இயேசுவை பலநேரங்களில் இதயத்தில் கொண்டுள்ளீர்கள். அவர் உள்ளங்களில் நிலைத்து இருக்கிறாரா? (MSF)

COMMUNICATION COMMISSION
DE LA SALLE BROTHERS - INDIA



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



## சிந்தனைத் துளிகள்

முதல் வாசகம்
எசாயா 52:7-10

பதிலுரைப்பாடல்
எபிரேயர் 1:1-6

நற்செய்தி
யோவான் 1:1-18

கிறிஸ்து பிறப்பு பகல் திருப்பலி

டிசம்பர் 2022

25

ஞாயிற்றுக்கிழமை

சிந்தனை
அருட்சகோ. சேவியர் ராஜா FSC

### மீட்பர் பிறந்துள்ளார்

புனித தெலசால் கூறுகிறார், "இன்று இயேசு மாட்டுக் குடிலில் ஒரு ஏழையாகப் பிறக்கிறார். நம் அன்னை கன்னி மரியாள் அவரை இவ்வுலகிற்கு கொண்டு வரக் கூடிய இடமானது மிகவும் எளிமையானது. அதில் எந்தவொரு வசதியுமில்லை. தீவனத் தொட்டியைத் தவிர புதிதாக பிறந்துள்ள குழந்தையை கிடத்த அங்கே வேறொரு படுக்கையுமில்லை. இயேசு கிறிஸ்து என்ற நம் மீட்பரை அவரது இவ்வுலக நுழைவிற்கு வழங்கப்பட்டுள்ள அரண்மனையும் படுக்கையும் இதோ இக்குடிலாக உள்ளது. இம்மதிப்பீட்டின் மீது ஒரு நேசத்தை வளர்க்கிறது. நாமும் இம் மதிப்பீட்டினை பெற்று அதனை நம் வாழ்வினில் கடைபிடிக்க இது அறிவுறுத்துகிறது. விண்ணுலக அரசரான இயேசு இம்மண்ணுலகத்தில் அவரது பிறப்பின் வேளையில் பல்வேறு தேவைகளையும் இழந்துள்ளதால், நாமும் சிலவற்றை இழக்கும் போதும் சில தேவைகளை பெறமுடியாமல் போகும்போதும் நாம் வியப்பதற்கு எதுவுமில்லை.

கிறிஸ்துவின் ஏழ்மையிலும் பணிவிலும் நீங்கள் அவரைப் போல ஒத்திருக்கவில்லையெனில் மிகவும் குறைவாகவே நீங்கள் அறியப்படுவீர்கள். குறைவாகவே பணியில் அமர்த்தப்படுவீர்கள். ஏழைகளால் நீங்கள் நேசிக்கப்படாமலும் பாராட்டப்படாமலும் இருப்பீர்கள். நீங்கள் அவர்களுக்கு மீட்பராய் ஒருபோதும் இருக்கப்போவதில்லை."



**தெலசாலின் பொன்மொழி**

இயேசு உங்கள் மனதை நல்ல குடியிருப்பாக கருத வேண்டும். ஆகையால், நீங்கள் அவரை அனைத்திற்கும் மேலாக அன்பு செய்ய வேண்டும். (MSF)

COMMUNICATION COMMISSION DE LA SALLE BROTHERS - INDIA



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



## சிந்தனைத் துளிகள்

முதல் வாசகம்
தி.பணி 6:8-10;7:54-60

பதிலுரைப்பாடல்
திபா. 31:2-3,5,7,15,16

நற்செய்தி
மத்தேயு 10:17-22

புனித ஸ்தேவான்

டிசம்பர் 2022

**26**

திங்கள்கிழமை


சிந்தனை
அருட்சகோ. சேவியர் ராஜா FSC


### இறைநம்பிக்கையின் வடிவம்

இன்று தாய் திருச்சபையானது புனித முடியப்பரின் திருநாளை கொண்டாடுகிறது. இறை நம்பிக்கையின் வடிவமாகத் திகழ்ந்தவர் அவர். புனித தெலசால் அவரைப் பற்றி கூறும்போது, திருத்தூதர் பணிகளில் புனித முடியப்பர் நம்பிக்கையினால் நிரப்பப்பட்டார் என சொல்லப்படுகிறது. இதனை அவர் நிச்சயமாக தான் வாழ்வில் வெளிப்படுத்தினார். விசுவாச எழுச்சியினால் அவர் தன்னை வழிநடத்திக் கொண்டார். அவ்வாறே அவர் செயல்படவும் செய்தார். அவர் பெற்ற இறை நம்பிக்கையினை அவரது சொந்த மக்களுடன் பகிரவும் செய்தார். விவிலியத்தின் துணையுடனும் அவர்கள் அறிந்திராத இயேசு கிறிஸ்து எவ்வாறு மீட்பிற்கான வழிகளை அவர்களுக்கு அளிக்க வந்தார் என்றும் இறுதியில் இம்மனுகுலத்திற்காக சாவினை ஏற்றார் என்றும் அவர்கள் புரிந்து கொள்ளுமாறு செயலாற்றினார். விசுவாசத்தினை போதித்த புனித முடியப்பர் இறுதியில் அவர் அதற்காகவே தன்னுயிரை கையளித்தார்.

உங்களுக்கு வரும் துன்பங்களை நீங்கள் விரும்பியே ஏற்றுக்கொள்ளுங்கள். இவைகள் எதன்மீதும் நீங்கள் அச்சம் கொள்ளவோ குறைபடவோ தேவையில்லை. இப்புனிதரை முன்மாதிரிகையாக கொண்டு உங்கள் அயலாரின் மூலமாக வரும் துன்பங்களை கடவுளின் கொடையாக ஏற்றுக் கொள்ளும் நம்பிக்கையினை நீங்கள் பெறுங்கள்."



**தெலசாலின் பொன்மொழி**

இயேசு உங்கள் மனதை நல்ல குடியிருப்பாக கருதவேண்டும். ஆகையால், நீங்கள் அவரை அனைத்திற்கும் மேலாக அன்பு செய்ய வேண்டும். (MSF)



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



## சிந்தனைத் துளிகள்

முதல் வாசகம்
1 யோவான்1:1-4

இரண்டாம் வாசகம்
திபா.97:1-2,5-6,11,12

நற்செய்தி
யோவான் 20:2-6

புனித யோவான்

டிசம்பர் 2022

**27**

செவ்வாய்க்கிழமை

சிந்தனை
அருட்சகோ. **சேவியர் ராஜா** FSC

### நம் இயேசுவின் அன்பிற்கினியவர்

கிறிஸ்துவில் நாம் முடிவில்லாத வாழ்வினைப் பெறுவோம் என உறுதியாக நம்பியவர் யோவான் என்னும் அப்போஸ்தலர். இயேசு அவரை அருட்பணிக்கு அழைத்தபோது எல்லாவற்றையும் விட்டுவிட்டு அவரை பின்தொடர்ந்தது மட்டுமல்லாமல் அவருடைய சிலுவைச்சாவின்போது இயேசு உடன் இருந்த ஒப்பற்ற சீடர் இவர் இயேசுவினிடத்தில் இச்சீடர் வைத்திருந்த வலிமையான அர்ப்பணிப்பு என்றுமே பாராட்டிற்குரியது.

இவரை குறித்து புனித தெலசால் கூறுகையில், "இயேசுவின் மார்பினில் இச்சீடர் தனது தலையினை சாய்த்து கொள்ள அனுமதிக்கப்பட்டார். இயேசு இவரிடத்தில் அவரது இறைத் தன்மையின் உயரிய மறைபொருளினையும் அவரது மனிதத்தன்மையினையும் வெளிப்படுத்தினார். இயேசு இறக்கும் வேளையில் அவருக்குரிய இடத்தினை இச்சீடருக்கு விட்டு கொடுக்க இவரைத் தேர்ந்தார். அவரது தாயின் வளர்ப்பு மகனாக இருக்கவும் அவரை பணித்தார்.

இயேசு கிறிஸ்துவின் அன்பினிலும் அவரது தோழமையிலும் இச்சீடரைப்போல நீங்களும் கௌரவிக்கப்பட போகிறீர்கள். ஜெபத்தில் உங்களை அதிகமாக ஈடுபடுத்துங்கள். அதில் இயேசு அவரது மறைபொருளினை உங்களுக்கு கற்றுத்தருவார். அவை பெரும்பாலானவர்களுக்கு அறியப்படாத ஒன்றாக இருக்கின்றன."



**தெலசாலின் பொன்மொழி**

உங்கள் பாதை கடினமாக உணரும்போது, கடவுளிடம் ஒப்புக்கொடுங்கள் அவர் உங்களை வழிநடத்துவார். MSF)



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



## சிந்தனைத் துளிகள்

முதல் வாசகம்
1 யோவான் 1:5 2:2

பதிலுரைப்பாடல்
திபா. 124:2-5,7-8

நற்செய்தி
மத்தேயு 2:13-18

புனித மாசில்லாக் குழந்தைகள்

டிசம்பர் 2022
**28**
புதன்கிழமை

சிந்தனை
அருட்சகோ. சேவியர் ராஜா FSC

### மாசில்லா குழந்தைகள்...

மீட்பர் பிறந்தபோது மாசில்லா குழந்தைகள் கொல்லப்பட்ட கொடிய சம்பவம் வரலாற்றில் அரங்கேறியது. மனித சுயநலத்திற்கு பேராசைக்கும் அதிகார பலாத்காரத்திற்கும் சான்றாக இந்நிகழ்வு இருக்கிறது. புனித தெலசால் கூறுகிறார், "இன்று மாசில்லாக் குழந்தைகளை மகிமைப்படுத்துவோம். அவர்கள் தீமையின் கொடூரத்தை அறிந்து கொள்வதற்கு முன்பே சாவினைப் பெற்றுக் கொள்ளும் ஆளானார்கள். இக்குழந்தைகள் மறைசாட்சிகளாக மரித்தனர். ஏனெனில் ஏரோது அரசன் அவனது கிரீடம் அவனை விட்டு கைமாறிப் போய்விடும் என்னும் பயத்தில் இக்கொடூரத்தை செய்தான். இக்குழந்தைகள் மரணத்தின் மூலம் இயேசுகிறிஸ்துவின் இறைத்தன்மைக்கு சான்று பகர்ந்தனர். அச் சான்றினை அவர்கள் இயேசு பிறந்த இடத்தில் அவர்களது உயிரினைக் கொடுத்து பறைசாற்றினர். இயேசு கிறிஸ்துவின் இடத்தை எடுத்துக்கொள்ளவே அவர்கள் மரித்தனர். இயேசுவின் உயிரைப் பாதுகாக்கவே இக்குழந்தைகள் மரணத்திற்கு அவர்களை கையளித்தனர். அவர்களது வாழ்வினை இயேசு நம்மில் மரிப்பதனைத் தடுக்கவே அவர்களை கையளித்தனர். இவ்வாய்ப்பினை நம்மாலும் பெற இயலும்". "பாவிகளே, கிறிஸ்துவை புதிதாக சிலுவையில் அறையுங்கள் என்ற புனித சின்னப்பரின் கூற்றிற்கு இணங்க, மீண்டும் ஒரு சிலுவைச் சாவினை அவர் ஏற்காமல் இருப்பதற்கு பாவத்தை நாம் விட்டொழிப்போம்".



**தெலசாலின் பொன்மொழி**
கடவுளின் மகன் இவ்வுலகில் வந்த நம் இதயங்களில் குடியிருக்க விரும்புகிறார்.
(MSF)

COMMUNICATION COMMISSION
DE LA SALLE BROTHERS - INDIA



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



## சிந்தனைத் துளிகள்

முதல் வாசகம்
1 யோவான் 2:3-11

பதிலுரைப்பாடல்
திபா. 96:1-3, 5-6

நற்செய்தி
லூக்கா 2:22-35

புனித தாமஸ் பெக்கேட்

டிசம்பர் 2022
**29**
வியாழக்கிழமை

சிந்தனை
அருட்சகோ. சேவியர் ராஜா FSC

### மீட்பை என் கண்கள் கண்டுகொண்டன

இன்றைய நற்செய்தியில் சிமியோன் மீட்பரைக் கண்டு கொள்கிறார். "இம்மீட்பே பிற இனத்தாருக்கும் வெளிப்பாடு, அருளும் ஒளி; இதுவே உம் மக்களாகிய இஸ்ரேயலுக்குப் பெருமை" என அவரைக் குறித்து இவர் புகழுரைக்கிறார். உண்மையில் நமது மீட்பரை நம்முடைய கண்கள் கண்டு கொண்டனவா?! நம் நடைமுறை வாழ்வில் ஆண்டவரது மீட்பு நம்மிடையே நடந்தேறுகிறதா? என நாம் நம்முடைய சந்தேகத்தை எழுப்பினால் அதற்கு நாம் ஆம் என்றே பதிலளிக்க வேண்டும். எப்போதெல்லாம் கடுமையான நமது கல் மனதை மாற்றி கனிவுள்ள எளிய மனம் படைத்தவராக நாம் மாறும்போதும், துயரப்படுபவர்களை உண்மையிலேயே தேற்ற முற்படும் போதும், சாந்தமுள்ள மனிதர்களாக வாழ முற்படுகிறபோதும், நீதியின் நிமித்தம் பசி தாகமுள்ளவர்களாக இருக்க விரும்பும்போதும், நம் மனதிற்குள் கடவுளுக்கு இடம் அளித்துவிட்டு தூய உள்ளம் கொண்டவராகத் திகழும்போதும், உண்மைக்காகவும் நீதிக்காகவும் பொது நலனுக்காகவும் நாம் துன்பங்களை பொறுமையுடன் ஏற்று அவைகளைத் தாங்கும் போதும், இரக்கமுள்ள நெஞ்சினராய் இருக்கும் போதும் , அப்போதெல்லாம் நம்மிடையே பிறர் மீட்பைக் கண்டு கொள்கின்றனர். நாம் பிறருக்கு மீட்பின் வெளிப்பாடாகவும் அதனை அருளும் ஒளியாக அன்றாட வாழ்வினில் திகழ்கிறோம். அதுவே நமக்குப் பெருமை.



**தெலசாலின் பொன்மொழி**

கடவுள் உங்களுக்கு வாழ்வை தந்து, அதை உங்களின் செயல்களில் அவர் உதவி புரிகிறார் என்பதை நினைத்துப் பார்க்கிறீர்களா? (MSF)



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



## சிந்தனைத் துளிகள்

முதல் வாசகம்
சீராக் 3:2-7,12-14

பதிலுரைப்பாடல்
திபா. 128:1-5

நற்செய்தி
மத்தேயு 2:13-15,19-23

சாபினுஸ் மற்றும் அவர் தோழர்கள்

டிசம்பர் 2022

**30**

வெள்ளிக்கிழமை

### திருக்குடும்பம்

இன்று நமது தாய்த் திருச்சபையானது திருக்குடும்ப விழாவினை கொண்டாடுகிறது. ஏரோது மன்னனுக்கு பயந்து அவர்களது சொந்த மண்ணைவிட்டு வெளியேறி எகிப்திலே வாழ்ந்தனர் புனித சூசையும் மரியாளும். அங்கே பாலன் இயேசு வளர்க்கப்பட்டார். அம்மன்னன் இறந்தபின் அவர்கள் மீண்டும் அவர்களது சொந்த மண்ணான நாசரேத்திற்கு வந்து திருக்குடும்ப விழாவினைத் தொடர்கின்றனர். தங்களது குழந்தையினைப் பொறுப்புணர்வோடும் அன்போடும் அனைத்து விதமான தீங்குகளிலிருந்து பாதுகாத்து பராமரித்த அவர்களது கடமையுணர்வு போற்றத்தக்கது. இறை அன்பினாலும் ஆசிராலும் அக்குடும்பம் கட்டுண்டு மகிழ்ந்தது. இன்றைய அருட்சகோதரக்குழுமம் ஒரு குடும்பமே. இதனை குறித்து புனித தெலசால் அவரது அருட்சகோதரர்களுக்கு கூறுகையில், "அருட்சகோரகுழுமம் ஒரு புனிதமான இடம். கடவுள் உண்மையில் அந்த இடத்திலே இருக்கிறார். இந்த இடம் கடவுளின் வீடு, விண்ணகத்திற்கான வாயில் என்பதில் எந்த விதமான சந்தேகமில்லை. இது உண்மையே, ஏனெனில் கடவுளின் பெயரானது அடிக்கடி இங்கே அழைக்கப்படுகிறது. தங்களது ஆன்மாக்களை புனிதப்படுத்திக் கொள்வதன் வழியாக இதில் வசிப்பவர்கள் தங்களை ஒன்றினைந்து காத்துக்கொள்கின்றன. இதன் எல்லையில் தான் நீங்கள் உலகத்திலிருந்து உங்களை விடுவித்து கொண்டு நீங்கள் செய்யவேண்டியவை இங்கே கடைபிடிக்கிறீர்கள். இதனால் தான் இங்கே எல்லாவிதமான பக்தி நெறிக்கான பயிற்சிகளை நீங்கள் கை கொள்கிறீர்கள்."



### தெலசாலின் பொன்மொழி

ஒற்றுமையாக இருப்பது விலைமதிப்பற்ற செல்வம், இதை தான் இயேசு சீடர்களுக்கு கற்பித்தார். அதை இழந்தால் அனைத்தையும் இழந்து விடுவோம். ஒற்றுமையை பாதுகாத்துக் கொள்ளுங்கள்.(MSF)

சிந்தனை
அருட்சகோ. சேவியர் ராஜா FSC



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



## சிந்தனைத் துளிகள்

முதல் வாசகம்
1 யோவான் 2:18-21

பதிலுரைப்பாடல்
திபா. 96:1-2,11-13

நற்செய்தி
யோவான் 1:1-18

புனித முதலாம் சில்வெஸ்டர்

டிசம்பர் 2022
**31**
சனிக்கிழமை

சிந்தனை
அருட்சகோ. **சேவியர் ராஜா** FSC

### மதிப்பாய்வு

இந்த ஆண்டின் இறுதிநாளில் நாம் இருக்கிறோம். ஓராண்டு முழுவதும் குழந்தைகளை நாம் பள்ளிக்கூடத்தில் பராமரித்து வழிநடத்தியிருந்துள்ளோம். புனித தெலசால் நம்மை கேட்கிறார், "பள்ளிக்கூடம் என்னுமிடத்தில் நாள் முழுவதும் நீண்ட நேரத்தை செலவிடுகிறீர்கள். உங்களை நீங்கள் நெருக்கமாக கண்காணிக்கிறீர்களா? உங்களது பணியில் நீங்கள் அடையும் நற்பலனை நீங்கள் இழக்காமல் இருக்க இக்கண்காணிப்பு உங்களை நெறிப்படுத்தும். சில நேரங்களில் நீங்கள் மிகவும் கவனக்குறைவாகவும், அலட்சியமாகவும் உங்களது குழந்தைகளிடம் நீங்கள் நடந்து கொள்ளவில்லையா? அவர்களிடமிருந்து தேவையற்ற தகவல்களைத் திரட்டுவதற்கென்றே அல்லது அவர்கள் உங்களிடம் சொல்லும் செய்திகளை நீங்கள் விருப்பத்துடன் கேட்பதற்கும், பேசுவதற்கும் உங்களை பயனற்ற முறையில் ஈடுபடுத்திக்கொண்டதில்லையா? அவர்கள் வாசிக்கும் போதோ அல்லது எழுதும்போதோ அவைகளுக்கு கவனம் செலுத்துவதை விட நீங்கள் உங்களது சொந்த வேலைகளில் ஈடுபடுத்துவதில்லையா? அவர்களுக்கு தகுந்த அறிவுரை கூறுவது உங்களது பொறுப்பல்லவா? வெற்றுப்பேச்சில் உங்களது நேரத்தை செலவிட்டதில்லையா? உங்களது பணியின் நேரம் குழந்தைகளுக்குச் சொந்தமாய் இருந்ததைவிட அது உங்களுக்கு சொந்தமானதாக அமையவில்லையா? இந்த ஆண்டில் நீங்கள் சரியாக செல்பட்டீர்களா? உங்களிடமுள்ள வயோதிகத் தனத்தை கைவிட்டுவிட்டு புதிய இளம் மனிதனை உடுத்தி கொள்ளுங்கள்."

### தெலசாலின் பொன்மொழி

என் கடவுளே, நான் பல அருளை உம்மிடமிருந்து பெற்றுள்ளேன். நான் எனது சிறிய பணிவான நன்றியுணர்வை வெளிப்படுத்துகிறேன். நான் உமக்கு கடமைப்பட்டிருக்கிறேன்.(Interior Prayer)



## திருவருகை காலம்



*முதல் வாரம்*

# நம்பிக்கை

**இயேசுவின் வருகையை நம்பிக்கையோடு எதிர்நோக்கி இருப்பது.**

(உரோமையர் 15:12-13)

*இரண்டாம் வாரம்*

# விசுவாசம்

**விசுவாசத்தோடு ஆண்டவருக்கான வழியை ஆயத்தமாக்குவது.**

(லூக்கா 3:4-6)

*மூன்றாம் வாரம்*

# மகிழ்ச்சி

**இயேசுவின் பிறப்பின் நற்செய்தி குறித்த மகிழ்ச்சி.**

(லூக்கா 2:10)

*நான்காம் வாரம்*

# அமைதி

**உலகில் அவருக்கு உகந்தோருக்கு அமைதி உண்டாகுக!**

(லூக்கா 2:14)

## கிறிஸ்துமஸ் தின வாழ்த்துக்கள்....

இறையேசுவில் பிரியமானவர்களே!

இறைவார்த்தையோடு லசாலிய சிந்தனைகள் மூலம் இவ்வருடம் உங்களை இந்திய தெலசால் சபையின் தகவல் தொடர்பு மூலமாக சந்தித்ததில் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை மாத இதழை வெளியிடுவதற்கு முழு அனுமதியையும், உற்சாகத்தையும் தந்த எம் இந்திய மறைமாநிலத்தலைவர் அருட்சகோ. **T. அமலன்** அவர்களுக்கு மனமார்ந்த நன்றிகளை சமர்ப்பிக்கிறேன்.

ஒவ்வொரு மாதமும் லசாலியச் சிந்தனைகளை இறைவார்த்தையோடு மிக ஆழமாக சிந்திக்க வைத்து அதனை நம் வாழ்வாக்க உதவிய கீழ்காணும் அனைத்து அருட்சகோதரர்களுக்கும் நெஞ்சார்ந்த நன்றிகளை உரித்தாக்குகிறேன்.

| மாதம் | சிந்தனையாளர்கள் |
|---|---|
| ஜனவரி | சகோ. **விக்டர்** FSC |
| பிப்ரவரி | சகோ. **கெல்டன்** FSC |
| மார்ச் | சகோ. **ஜான்** FSC |
| ஏப்ரல் | சகோ. **அருள்சாமி** FSC |
| மே | சகோ. **இராபர்ட் புரோவிங்** FSC |
| ஜுன் | சகோ. **ஜெரால்டு** FSC |
| ஜுலை | சகோ. **ஜெயக்குமார்** FSC |
| ஆகஸ்ட் | சகோ. **கென்னடி** FSC |
| செப்டம்பர் | சகோ. **ஆரோக்கிய தாஸ்** FSC |
| அக்டோபர் | சகோ. **பிரினோஸ்** FSC |
| நவம்பர் | சகோ. **பிரிக்ஸ்டன்** FSC |
| டிசம்பர் | சகோ. **சேவியர் ராஜா** FSC |

புனித தெலசாலின் வாழ்க்கை குறிப்பினை மிக சுருக்கமாக தெளிவாக் தொகுத்து வழங்கிய அருட்சகோ. **ஆரோக்கியசாமி** அவர்களுக்கும், ஒவ்வொரு மாத இதழின் சிந்தனைகளை திருத்தம் செய்து சிறப்பித்த அருட்சகோ. **சேவியர் ராஜா** அவர்களுக்கும், ஒருங்கிணைந்து இவ்விதழை வெளியீட உதவிகரம் நீட்டிய அனைத்து **தகவல் தொடர்பு உறுப்பினர்களுக்கும்** மனம் உகந்த நன்றிகளை சமர்ப்பிக்கின்றேன்.

இவ்விதழுக்கு வடிவம் அளித்து, அச்சக பதிப்பினை தந்த காளையார்கோவில் இதயம் பிரிண்டர்ஸ் நண்பர்களுக்கு இதயம் கனிந்த நன்றிகள்.

இறைவார்த்தையோடு லசாலிய சிந்தனைகளை ஒவ்வொரு மாதமும் தியானித்த உங்கள் அனைவருக்கும் நன்றிகளை சமர்ப்பித்து, மீண்டும் **"WORD OF GOD in the eyes of Lasallians - Bible Diary 2023"** என்ற ஆங்கில மொழி பதிப்போடு சந்திப்போம்.

*இறைவன் நம் இதயங்களில் என்றென்றும் இருப்பாராக.*



**நன்றி !!!**

அருட்சகோ. **அருள் ஜுவகர்** FSC
தலைவர், தகவல் தொடர்பு குழு
தெலசால் அருட்சகோதரர்கள் – இந்தியா




வெளியீடு
தகவல் தொடர்பு குழு
தெலசால் சபை, இந்திய மறைப்பணித்தளம்.
இளைஞர் நகர் புல்லூத்து, நாகமலை, மதுரை – 625019

Lasad For India | De La Salle Bros-LASAD India | www.lasadindia.org